செய்தி வெளியீடு எண்: 22 நாள்: 08.01.2010

# 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய திரைப்பட விருதுகளைத் தேர்வு செய்திட ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.எஸ்.மோகன் தலைமையில் குழு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளையும்; 2008–2009, 2009–2010 ஆகிய ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகளையும் தேர்வு செய்வதற்காக, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையில், திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமாகிய திரு. இராம நாராயணன், திரைப்பட ஒளிப்பதிவாளர் மற்றும் இயக்குநர் திரு. பி. அமிர்தம், திரைப்பட நடிகரும் இயக்குநருமான திரு.கே.பாக்யராஜ், திரைப்பட நடிகர்கள் திரு.வாகை சந்திரசேகர், திரு.சிவகுமார், திரு.சாருஹாசன், திரு.ஒய்.ஜி.மகேந்திரா, திரு.குமரி முத்து, நடிகை திருமதி குஷ்பு, இசையமைப்பாளர் திரு.தேவா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், எம்.ஜி.ஆர். திரைப்பட மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்வுக் குழுவினை அமைத்து முதலமைச்சர் கலைஞர் இன்று (8.1.2011) ஆணையிட்டுள்ளார்.

---

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.